بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *17/10/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ إِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾

صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் தபூக் போர் பற்றி சுருக்கமாகக் கூறப்பட்டது. அதன் மேலும் சில விவரங்களை இன்று நான் எடுத்துரைக்கிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூத் (ரலி) அவர்கள் இந்தத் தபூக் போரின் பின்னணியை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, (خَزْرَجُ) ஃஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவனான அபூஆமிர் மதனீ என்பவன் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடன் தொடர்பு வைத்திருந்ததால், வழிபாடு மற்றும் ஜபம் செய்யும் பழக்கம் உள்ளவனாக இருந்தான். மக்கள் இவனைத் துறவி என்று அழைத்தனர். ஆனால் மதப்படி இவன் கிறிஸ்தவனாக இருக்கவில்லை. இவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்த பிறகு, மக்காவுக்கு ஓடிச் சென்றுவிட்டான்.

மக்காவும் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, இவன் இப்போது இஸ்லாத்திற்கு எதிராகக் கலவரம் ஏற்படுத்துவதற்கு வேறு ஏதேனும் ஒரு தந்திரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று யோசித்தான். கடைசியாக, இவன் தனது பெயரையும் தோற்றத்தையும் மாற்றிக் கொண்டு, மதீனாவுக்கு அருகில் உள்ள குபா எனும் கிராமத்தில் தங்க ஆரம்பித்தான். பல ஆண்டுகளாக வெளியே தங்கி இருந்ததனால் மதீனத்து மக்கள் இவனை அடையாளம் காணவில்லை.

இவன் மதீனாவின் முனாஃபிக்களுடன் சேர்ந்து சதிதிட்டம் தீட்டினான். அவர்களிடம், ‘நான் சிரியாவுக்குச் சென்று கிறிஸ்தவ அரசாங்கத்தையும், அரபு கிறிஸ்தவக் கோத்திரங்களையும் தூண்டி விடுகிறேன். மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க அவர்களைத் தூண்டி விடுகிறேன். இங்கே நீங்கள், சிரியாவின் படைகள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தப் போவதாகச் செய்தி பரப்பத் தொடங்கி விடுங்கள்’ என்று கூறினான்.

வந்த செய்திகளின் அடிப்படையில், ஹுஸூர் (ஸல்) அவர்கள் ரோம் நாட்டினரை எதிர்த்துப் போரிடுவதில் தாமதம் செய்தால் அதன் இழப்புகள் அதிகமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால், ரோம் நாட்டினருக்கு தாக்குதல் தொடுப்பதற்கு வாய்ப்பு கொடுக்காமல், அவர்களின் பகுதிக்குச் சென்று தீர்மானிக்கும் போரை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

பொதுவாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருப்பார்கள். ஆனால் (خَيْبَرْ) ஃஹைபர் போருக்குப் பிறகு, தபூக்கின் போர்த்திட்டம் எப்படி இருந்தது என்றால், மாநபி (ஸல்) அவர்கள் பொது அறிவிப்பு செய்து விட்டார்கள். வழியில் உள்ள சிரமங்களையும் எதிரிகளின் எண்ணிக்கையின் பெருக்கத்தையும் முன்பே அறிவித்து விட்டார்கள்.

இது பஞ்சம் வந்த ஆண்டாகும். உணவுப் பற்றாக்குறை இருந்தது. மக்கள் தங்கள் பயிர்களை அறுவடை செய்யும் கவலையிலும் ஆயத்தத்திலும் இருந்தபோதுதான் ஜிஹாதுக்குப் புறப்படுவதற்கான அறிவிப்பு வந்து விட்டது. கடுமையான கோடைக்காலமாக இருந்தது. நூற்றுக்கணக்கான மைல் தொலைவுப் பயணம், அத்துடன் வழிக்கான உணவுப் பொருட்களின் பற்றாக்குறை இருந்தது. இத்தனை பிரச்சினைகள் இருந்தபோதிலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து ஜிஹாதுக்குச் செல்ல அறிவிக்கப்பட்டபோது, உயிர்த்தியாகம் செய்யத் துணிந்த சஹாபா ஜிஹாதுக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினார்கள்.

இந்தத் தருணத்தில், வசதிபடைத்த சஹாபாவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொருள் தியாகம் செய்யுமாறு வலியுறுத்தினார்கள். அப்பொழுது எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தம் வீட்டின் அனைத்துச்

சொத்துக்களையும் கொண்டு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது பாதிச் சொத்தைக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆயத்தமாக இருந்த முந்நூறு ஒட்டகங்களை அவற்றின் சேணம் மற்றும் பல்லக்குடன் சேர்த்து இந்தப் போரின்போது சமர்ப்பித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், "இதற்குப் பிறகு உஸ்மான் என்ன செய்தாலும், அவர் பிடிக்கப்படமாட்டார்" என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்தத் தருணத்தில் ஓராயிரம் தீனார்களையும் சமர்ப்பித்தார்கள். இன்னொரு அறிவிப்புப்படி, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் ஆயிரம் ஒட்டகங்களையும், எழுபது குதிரைகளையும் சமர்ப்பித்தார்கள். சில அறிவிப்புகளின்படி, இந்தப் போருக்கான அனைத்துச் செலவுகளையும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் நூறு ஊக்கியா (1 ¼ கிலோ) அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, 200 ஊக்கியா (2 ½ கிலோ) அல்லது 400 ஊக்கியா (5 கிலோ) வெள்ளியை சமர்ப்பித்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பொருள் தியாகங்களின் முக்கியத்துவம் என்ன என்பதை அஹ்மதிய்யா ஜமாஅத் மக்களும் புரிந்திருக்கிறார்கள். நான் பெரும்பாலான நிகழ்வுகளை எடுத்துரைக்கிறேன். சிலர் உண்மையில் தங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள். செல்வந்தர்களும், வசதி படைத்தவர்களும்கூட ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் முன்மாதிரிகளை முன்வைக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால், உயர்த்தரத்திலான தியாகங்களைச் செய்யும் பல செல்வந்தர்கள் இருக்கிறார்கள். பலவீனமானவர்களும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக முன்வர வேண்டும்.

இந்தத் தருணத்தில் வசதிபடைத்த சஹாபாவுடன் ஏழை, இயலாத சஹாபாவும் தம்மால் முடிந்தவரை பொருள் தியாகங்களை சமர்ப்பித்தார்கள். நயவஞ்சகர்கள் இந்த ஏழை சஹாபாவைப் பார்த்து, "இவர்கள் கைப்பிடி தானியங்களை சமர்ப்பித்து ரோமானியர்களுடன் போர் புரிய ஆயத்தம் செய்கிறார்கள்" என்று ஏளனம் செய்வார்கள்.

பெண்களும் இந்தத் தருணத்தில் தம்முடைய நகைகளை சமர்ப்பித்து பொருள் தியாகத்தில் பங்கு பெற்றார்கள்.

நயவஞ்சகர்கள் தங்கள் தரப்பிலிருந்து முழு பலத்தையும் போட்டு, முஸ்லிம்களைப் போருக்கு செல்லாமல் தடுக்க முயற்சி செய்து வந்தார்கள். நயவஞ்சகர்கள், 'வெயில் பயங்கரமாக இருக்கிறது. எந்த எதிரிகளுடன் போர் நடக்கப் போகிறதோ அவர்கள் மிகவும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள்' என்று கூறி வந்தார்கள். மதீனத்து மக்கள் விவசாயத் தொழில் செய்பவர்களாக இருந்தார்கள். அவர்களின் பயிர்கள் அறுவடைக்குத் தயாராக இருந்தன. எப்படியாயினும், நயவஞ்சகர்கள் மக்களைப் போருக்கு செல்வதிலிருந்து தடுத்தனர். ஆனால், கலப்பற்ற சஹாபா பெருமக்கள் மீது அவர்களுடைய பிரச்சாரத்தின் தாக்கம் ஏற்படவில்லை.

நயவஞ்சகர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் சென்று, போருக்கு செல்லாமல் இருப்பதற்கு சாக்குப்போக்குகளை முன்வைப்பார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்கள் அனைவருக்கும் அனுமதி வழங்கி விடுவார்கள். எனினும், திருக்குர்ஆன் இந்த அனைத்து நயவஞ்சகர்களின் முகத்திரையைக் கிழித்து விட்டது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

தூரம் குறைவாக இருந்து பயணம் எளிதாக இருந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக உமக்குப் பின்னால் வந்திருப்பர். ஆனால், அவர்கள் சிறிதும் சிரமத்தை மேற்கொள்பவர்கள் அல்ல. அவர்கள், 'எங்களால் முடிந்திருப்பின், கட்டாயம் நாங்கள் உங்களுடன் புறப்பட்டிருப்போம் என்று' அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுவர். அவர்கள் தங்களையே அழிவிற்குள்ளாக்கிக் கொள்கின்றனர். அவர்கள் பொய்யர்கள் என்பதனை அல்லாஹ் அறிகின்றான்.

அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக! அவர்களுள் யார் உண்மை கூறுகிறார்கள், யார் பொய்யர்கள் என்பதை நீர் அறிந்து கொள்ளும் வரை, நீர் அவர்களுக்கு அனுமதியே ஏன் வழங்கினீர்? அல்லாஹ்விடத்தும், மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொள்பவர்கள் தங்கள் பொருள்களையும் தங்கள் உயிர்களையும் கொண்டு அறப்போர் செய்வதிலிருந்து விலகிக் கொள்ள உம்மிடம் அனுமதி கோர மாட்டார்கள். அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நன்கு அறிபவனாவான்.

அல்லாஹ்விடத்தும் மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொள்ளாதவர்களும், தங்கள் உள்ளங்களில் சந்தேகங்களைக் கொண்டிருப்பவர்களும் மட்டுமே பின்தங்கி விடுவதற்கு உம்மிடம் அனுமதி கோருவர். அவர்கள் தங்களின் சந்தேகங்களின் காரணமாக இங்கு மங்குமாகத் தடுமாறுகின்றனர். அவர்கள் போருக்குப் புறப்படுவதற்கு உறுதியான நாட்டம் கொண்டிருப்பார்களாயின், நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள். ஆனால் இந்த உயர்வான நோக்கத்திற்காக அவர்கள் புறப்படுவதனை அல்லாஹ் விரும்பவேயில்லை. எனவே தங்கள் இடத்திலேயே அவர்களை அவன் உட்கார வைத்து விட்டான். மேலும், உட்கார்ந்து கொண்டேயிருப்பவர்களுடன் நீங்களும் உட்கார்ந்து கொண்டேயிருங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது.

அவர்கள் உங்களுடன் இணைந்து போருக்குப் புறப்பட்டிருப்பார்களாயின், தீமையைத் தவிர உங்களுக்குச் சிறிதும் உதவி செய்திருக்க மாட்டார்கள். அவர்கள் உங்களுக்கிடையே குழப்பத்தை உருவாக்குவதற்காக சுற்றித் திரிந்திருப்பார்கள். அவர்களுக்(குக் கூறுவதற்)காக (செய்திகளை) உன்னிப்பாகக் கேட்பவர்கள் சிலரும் உங்களுள் இருக்கின்றனர். மேலும் அநீதி இழைப்பவர்களை அல்லாஹ் நன்கு அறிகின்றான். நிச்சயமாக அவர்கள் இதற்கு முன்னரும் குழப்பத்தை உருவாக்க நாடியிருந்தனர். அவர்கள் உமக்கு முன்னால் விவகாரங்களை மாற்றி மாற்றி முன் வைத்தனர். இறுதியில் உண்மை வந்து விட்டது. அவர்கள் முற்றிலும் வெறுப்போராக இருந்தும் அல்லாஹ்வின் தீர்ப்பு வெளியாயிற்று.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இதன் மீதமுள்ள விளக்கத்தை இனிவரும் காலத்தில் எடுத்துக் கூறுவேன். இன் ஷா அல்லாஹ்.

*ரப்வாவின் பள்ளிவாசலில் தாக்குதல் தொடுக்கப்பட்டதன் விளைவாக காயமடைந்த வீரமான காதிம்களைப் பற்றி கூறியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:*

கடந்த குத்பாவில், ரப்வாவில் உள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதலைப் பற்றி நான் குறிப்பிட்டேன். காயமடைந்திருக்கும் அஹ்மதி குத்தாமுக்காக துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு முழுமையான உடல் நலத்தை வழங்குவானாக! பின்விளைவாக ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் அல்லாஹ் அவர்களைப் பாதுகாப்பானாக!

இப்பொழுது மூன்று குத்தாம் அதிகமாகக் காயமடைந்துள்ளனர்; மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற ஐந்து பேர் சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுடைய காயங்கள் ஆறுவதற்கும் இன்னும் நேரம் எடுக்கும். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் முழுமையான குணமளிப்பானாக! எதிர்காலத்தில், எல்லா இடத்திலும் எல்லாத் தீமைகளிலிருந்தும், எல்லா இழப்புகளிலிருந்தும், ஜமாஅத் மக்களை பாதுகாப்பானாக!

**இறுதியாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மார்ஷல் தீவுகளைச் சேர்ந்த மர்ஹூம் மதிப்பிற்குரிய சாம் அலீ நைனா சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்து வைத்து அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகை தொழவைக்கப்படும் என அறிவித்தார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) மர்ஹூம் அவர்களின் பாவமன்னிப்பு மற்றும் உயர்ப்படித்தரத்துக்காக துஆ செய்தார்கள். மேலும், அவர்களுடைய குடும்பத்தினர் சிலர் அஹ்மதிகள் இல்லை என்று கூறி, அல்லாஹ் அவர்களுக்கம் அஹ்மதிகள் ஆவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக என துஆ செய்தார்கள். (ஆமீன்.)**

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ

سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا

عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ

وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**